
*TAMIL – “Peace”*

# சமாதானம்

**“ உனக்குக் கிடைத்த இந்த நாளிலாகிலும் உன் சமாதானத்திற்கு ஏற்றவைகளை நீ அறிந்திருந்தாயானால் நலமாயிருக்கும் ”**

**(லூக்கா 19 : 42)**



நம்மைச் சூழ்ந்துள்ள நிலைமையையும், இன்று உலகிலே சம்பவிக்கிறவைகளையும் நாம் காண்போமானால், உலகிலே சமாதானம் இல்லை என்பதை மிகத்தெளிவாகக் கண்டுக்கொள்ளமுடியும். எப்பக்கம் திரும்பினாலும் பகைகள், சண்டைகள், கொலைகள், யுத்தங்கள், யுத்தங்களின் செய்திகளையும் நீங்கள் கேள்விப்படலாம். எந்தச் செய்தித்தாளை எடுத்துப்பார்ப்பினும் சரி பாவம், பகை, பொறாமையினாலே ஜனங்கள் ஒருவருக்கொருவர் இழைத்திடும் கொடிய தீமைகளைப் படிக்கலாம். உலகப்பெரியார்கள் உலகிலே சமாதானத்தை நிலைநாட்டிட பல வருடங்களாய் பிரயாசப்பட்டும், ஒருவரும் இன்னமும் வெற்றிபெற்றாரில்லை. உலகத்திலே சமாதானமில்லாதது மாத்திரமல்ல, இன்று நம் அநேகருடைய வீடுகளிலுங்கூட சமாதானமில்லாத பரிதாப நிலையுள்ளது. இதைவிட மிகப்பெரிய பரிதாபமான நிலையாதெனில் ஏராளமான ஜனங்களுடைய சொந்த ஆத்துமாவிலே சமாதானம் இல்லாததே. சகல சஞ்சலங்களுக்கும் காரணமாயிருப்பது சமாதானமில்லாததேயாகும்.

# சமாதானம் இல்லாதது ஏன்?

ஆதியிலே தேவன் உலகத்தை உண்டாக்கினுர். உலகிலுள்ள புல்லையும், பூவையும், மரங்களையும் முளைக்கப்பண்ணினுர். நிலத்தின் மேல் வாழும் மிருகங்களையும், நீரிலேவாழும் ஜந்துக்களையும் உருவாக்கினுர். ஆதாம், ஏவாள் என்ற இரண்டு பேரையுங்கூட அவர் சிருஷ்டித்தார். இந்த சிருஷ்டிப்புகள் எல்லாவற்றிலேயும் சமாதானம் இருந்தது. ஆதாமும் ஏவாளும் எந்த மிருகத்துக்கும் பயப்படவில்லை; மிருகங்களும் ஒன்றுக்கொன்று சமாதானமுடனும் சந்தோஷமுடனும் வாழ்ந்து வந்தன. ஆடு சிங்கத்துடன் நடந்து செலலும், சிங்கம் ஆட்டுக்கு எவ்வித தீங்கும் விளைவிக்காது. இதெல்லாவற்றைக் காட்டிலும் மேன்மையானது ஒன்று இருந்தது. அதாவது தேவனும் மனிதனும் சமாதானமுடனிருந்தார்கள்; பகலின் குளிர்ந்த வேளையிலே தேவன் மனிதனுடன் உலாவினுர், மனிதனுடன் உறையாடினுர். தேவனுக்கு அவர்கள் பயப்படவேண்டிய நிர்பந்தம் இல்லை. அதறகுப் பதிலாக அவர்கள் தேவனுடைய ஐக்கியத்தை விரும்பி அவரது வருகைக்காக வாஞ்சித்துக் காத்திருந்தார்கள்.

சமாதானத்துக்குப் பகைவனுன சாத்தான், பாம்பைப் போல வந்து பாவஞ்செய்யும்படி ஆதாமையும் ஏவாளையும் சோதித்தான். பாவம் எங்கே உண்டோ அங்கே சமாதானமில்லை. பொய்க்குப் பிதாவாகிய சாத்தான் ஏமாற்றினுன். தேவனுக்குக் கீழ்ப்படியாவிட்டாலும், தேவன் விலக்கின கனியைப் புசித்தாலும் அவர்கள் சாகமாட்டார்கள் என்று வஞ்சித்தான். இப்படி பிசாசின் சொல்லுக்கு இன்றைக்கும் அநேகர் செவிகொடுக்கிறதுபோலவே அன்றைக்கும் ஆதாமும் ஏவாளும் செவிகொடுத்து தேவனுக்கு விரோதமாக பாவம் செய்தார்கள். அந்த க்ஷணமே அவர்களிலே நிலைத்திருந்த சமாதானம் எடுபட்டுப் போயிற்று. ஒரே ஒரு பாவச் செயலாலே தேவனுடைய சிருஷ்டிப்பிலே இருந்த சகல அழகும் சமாதானமும் அழிந்து ஒழிந்து போயிற்று. பயம் ஆதாமையும் ஏவாளையும் பற்றிக்கொண்டது.

அன்று மாலையிலே தேவன் வழக்கம் போல அவர்களுடன் உலாவவும் உறையாடவும் வந்தபோது, அவர்களிருவரும் பயந்து, அவருடைய பிரசன்னத்தை விட்டு ஓடி ஒளிந்துகொண்டார்கள். "ஒரே மனுஷனுலே பாவம் உலகத்திலே பிரவேசித்தது". இன்று உயிரோடிருக்கிற "நாமெல்லோரும் பாவஞ்செய்து தேவமகிமையற்றவர்களானேம்" (ரோமர் 5 : 12 ; 3 : 23). ஒரு பாவம் மற்ற பாவங்களுக்கு வழிநடத்திடும், ஆதலால் உலகமுழுவதும் பாவ வியாதியால் பீடிக்கப்பட்டிருக்கிறது. இதனுலே பூமியின் மேலே சமாதானம் நிலவியில்லை.

# சமாதானத்தைத் திரும்பவும் உலகிலே கொண்டுவர தேவன் விரும்பினுர்.

தேவன் பரலோகத்திலிருந்து கீழே பார்த்தார். பகை, பயம், பாவப் பரிதாப நிலைகளைக் கண்டார். தமது பெரிதான அன்பினுலே தமது ஒரே பேரான குமாரனை ஒரு மாட்டுத்தொழுவத்திலே மானிடனுகப் பிறந்திடச்செய்தார். ஒவ்வொரு வருஷமும் கிறிஸ்துமஸ் தினமானது இதைத்தான் நமக்கு ஞாபகப்படுத்துகிறது. "பயப்படாதிருங்கள்; இதோ எல்லா ஜனத்துக்கும் மிகுந்த சந்தோஷத்தை உண்டாக்கும் நற்செய்தியை உங்களுக்கு அறிவிக்கிறேன். இன்று கர்த்தராகிய கிறிஸ்து என்னும் இரட்சகர் உங்களுக்குத் தாவீதின் ஊரிலே பிறந்திருக்கிறுர். ......... ...பரமசேனையின் திரள் தோன்றி : உன்னதத்திலிருக்கிற

தேவனுக்கு மகிமையையும், பூமியிலே சமாதானமும், மனுஷர்மேல் பிரியமும் உண்டாவதாக என்று சொல்லி, தேவனைத்துதித்தார்கள்'' (லூக்கா 2 : 10-14). ''அந்தகாரத்திலும் மரண இருளிலும் உட்கார்ந் திருக்கிறவர்களுக்கு வெளிச்சம் தரும்புடிக்குத்தான்'' (லூக்கா 1 : 78) இயேசு இவ்வுலகுக்கு அனுப்பப்பட்டார். நம்முடைய சமாதான காரணரும் அவரேதான் (எபே. 2 : 14). சமாதானப்பிரபுவை தேவன் இவ்வுலகிற்கு அனுப்பி வைத்தார்; இந்தச் சமாதானப் பிரபுவை அக் காலத்து ஜனங்கள் ஏற்றுக்கொண்டிருந்தால் அவர்கள் மறுபடியும் சுமூகமாக வாழ்ந்திருக்கலாம்.

# சமாதானப் பிரபுவை அந்த ஜனங்கள் என்ன செய்தார்கள்?

ஆதாம் ஏவாளைப்போன்றும், யூதர் புறஜாதிகளைப் போன்றும் அக் காலத்து அந்த ஜனங்களும் தேவனுக்குக் கீழ்ப்படியாமல் சாத்தானின் ஆலோசனையைப் பின்பற்றினார்கள். பிலாத்து, இயேசுவையும் பர பாசையும் ஜனங்களுக்கு முன்பாக நிறுத்தினபோது அவர்களெல்லாரும் ''இயேசுவை அப்புறப்படுத்து, பரபாசை எங்களுக்குத் தா'' என்பதாக சத்தமிட்டார்கள். விளங்கச் சொல்லுவோமானால் ''சமாதானப்பிரபுவை அப்புறப்படுத்து; பகை, சண்டைகள், கொலைகளாகிய பாவங்களை எங்களுக்குத் தா'' என்பதாகக்கேட்டார்கள் என்றே சொல்லவேண்டும். அவர்களை ஒருவரும் கட்டாயப்படுத்தி ஏற்றுக்கொள்ளச் சொல்லவில்லை. தங்கள் விருப்பப்படியே பரபாசை தெரிந்துக்கொண்டார்கள். இக்காலத் திலே வாழும் நமக்குங்கூட நமது விருப்பப்படி செய்யவே நமக்கு சுயாதீனமளிக்கப்பட்டிருக்கிறது. இயேசுவை நம்முடைய இரட்சகரா கவும் நமது இராஜாவாகவும் நாம் ஏற்றுக் கொள்வோமானால் நமது வாழ் விலே சமாதானமருளுவார். ''சமாதானத்தை உங்களுக்கு வைத்துப் போகிறேன், என்னுடைய சமாதானத்தையே உங்களுக்குக் கொடுக் கிறேன்; உலகம் கொடுக்கிற பிரகாரம் நான் உங்களுக்குக் கொடுக்கிற தில்லை'' (யோவான் 14 : 27) என்பதாக இயேசு சொல்லுகிறார். நம் முடைய ஜீவியத்திலுள்ள பாவம் நம்மைத் தேவனை விட்டு தூரக் கொண்டுபோய்விட்டது; இப்பாவநிலையினாலே நம்மிலே சமாதான மில்லை. ஆனால் இயேசுவோ, தமது அன்பின் கரங்களை நீட்டினவராய் நம்மைத் திரும்பவும் அவருடன் சமாதானமாக்கிட காத்து நிற்கிறார்; தமது விலையேறப் பெற்ற இரத்தத்தினாலே கழுவி, தேவனுடைய பிள்ளைகளாகிற அதிகாரத்தையும் நமக்குத் தந்து, அதோடுகூட சமாதானத்தையும் அருளிச் செய்ய ஆவலுடன் காத்திருக்கிறார்..

இதனை விசுவாசித்தால், நாம் விசுவாசத்திலே நீதிமான்களாக்கப்பட்டு, நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்து மூலமாய் தேவனிடத்தில் சமா தானம் பெற்றுக்கொள்வோம் (ரோமர் 5 : 1). நமக்கு சமாதானம் கொடுக்க இவ்வுலகிலே வேறொன்றும் கிடையாது. பணமோ, புகழோ நமக்குச் சமா தானம் தராது; மதுபானமும் சமாதானம் தராது; சபையின் அங்கத்தின ராய் ஒரு சபைப் பட்டியலிலே பெயர் எழுதியிருப்பது சமாதானம் தராது. நம்முடைய ஆத்துமாவிலே சமாதானம் பெற்றிட ஒரே ஒரு வழிதான் உண்டு; கர்த்தராகிய இயேசுவிடம் வந்து, நமது பாவங்களை மெய்மன ஸ்தாபத்துடன் அவரிடம் அறிக்கையிடவேண்டும். அவரோ நமது பாவங் களை நமக்கு மன்னித்து எல்லா அநியாயத்தையும் நீக்கி நம்மைச் சுத்திகரிப் பதற்கு உண்மையும் நீதியும் உள்ளவராயிருக்கிறார் (I யோவான் 1 : 9). இயேசு கொடுக்கிற சமாதானமோ எல்லாப் புத்திக்கும் மேலான தேவ சமா தானம் (பிலிப் 4 : 7). இதனை மனிதனாலே விவரித்துக் கூறிடமுடியாது, ஆனால் வாழ்க்கையிலே அநுபவித்து ருசித்திட முடியும். உலகத்தையும்

உலகத்திலுள்ளவைகளையும் வெறுத்துத் தள்ளி, பாவத்தையும் பாவ நண்பர்களையும் விட்டுவிட்டு, கர்த்தராகிய இயேசுவின் பக்கம் திரும்பி இயேசுவின் சேவை செய்திட விரும்புகிற ஒவ்வொருவருக்கும் இந்த தேவ சமாதானம் கிடைத்திடும். **நாம் ஒருவேளை சமாதானமில்லாமல் ஜீவித்திடலாம் ஆனால் சமாதானமின்றி மரித்திடக்கூடாது.** ஏனெனில், “தேவனுடைய ராஜ்யம் புசிப்பும் குடிப்புமல்ல, அது நீதியும் சமாதானமும் பரிசுத்த ஆவியினாலுண்டாகும் சந்தோஷமுமாயிருக்கிறது” (ரோமர் 14:17) ஆகையினாலே நம்முடைய இருதயத்தில் சமாதானமின்றி நாம் மரித்திட்டால், சமாதானம் வாசமாயிருக்கிற பரலோகத்திலே நாம் நிச்சயமாக வரவேற்கப்படமாட்டோம்.

சமாதானப் பிரபுவை நாம் ஏற்றுக் கொள்ளாமல் நமது பாவ நிலையிலே நாம் மரிப்போமானால் நாம் போய் சேரக்கூடிய ஒரே ஒரு இடந்தான் உண்டு; அது அக்கினி அவியாத நித்திய நரகம். பாவஞ் செய்கிற எல்லாருமே புகையும் நெருப்புத்தழலுமாய் இருக்கிற இந்த நித்திய நரகத்துக்கே செல்வார்கள். இதனை வாசிக்கிற நீயும் பாவத்தினாலே சமாதானமற்று மரித்தால் நீயுங்கூட நித்திய நித்தியமாய் தேவனற்ற இடத்தையல்லவோ தெரிந்துக் கொள்கிறாய். நீதிமான் ஒருவனாகிலும் இல்லை, எல்லாரும் பாவஞ் செய்து தேவ மகிமையற்றுப் போனார்கள். ஆதலால் மோட்சத்துக்குபோக உனக்கு விருப்பமானால் நீ தேவனுடன் சமாதானமடையவேண்டும். தேவ சமாதானம் உனது இருதயத்தை ஆளவேண்டும் (கொலோ 3:15).

கிறிஸ்துமஸ் தினம் இயேசு உலகத்துக்கு சமாதானம் கொண்டுவந்ததை குறிப்பிடுகிறது; ஈஸ்டர் தினம் இயேசு புறக்கணிக்கப்பட்டு சிலுவையிலே அறையப்பட்டதைக் குறிப்பிடுகிறது. அருமை நண்பனே, இயேசுவை நீ ஏற்றுக்கொண்டாயா அல்லது புறக்கணித்தாயா? ஒரு மனிதன் தனது வாழ்நாட்காலத்திலே நான்கு அரசர்கள் மாறி மாறி அரசாண்டதாகக் கூறினான். முதலாம் அரசனுடைய காலத்திலே பயங்கர யுத்தம் ஏற்பட்டது; இரண்டாம் அரசனுடைய காலத்திலே கொடிய பஞ்சம் உண்டாயிற்று; எலி, புல், மரம் முதலியவற்றை சாப்பிட்டார்கள். மூன்றாவது அரசன் குடி மக்களை அடிமைப்படுத்தி வேலைக்காரரைப் போல அவர்களை நடத்தினான். இந்த சமயத்திலேதான் ஓர் பேரரசர் வந்தார்; அவர் நல்லவரும் வல்லவருமானவர், அவர் அன்பின் சொரூபி, சமாதானப் பிரபு—அவர்தான் பரலோகத்திலிருந்து வந்த கர்த்தராகிய இயேசு. இந்த அரசர் இருதயங்களைக் கொள்ளை கொண்டு பரிபூரண சமாதானம் அருளுகிறவர், பரலோகத்திலே அவருடனே நித்திய நித்தியமாய் சொல்லி முடியாத சந்தோஷத்துடன் வாழ்ந்திட நம்பிக்கை அளிக்கிறவர்.

நண்பனே, சற்று நில். நீ அழிவின் பாதையிலே வெகுவேகமாக நரகத்தை நோக்கி கீழே செல்வதை விட்டுவிடு. உனது வாழ்க்கையை இயேசுவுக்கு ஒப்புவித்துவிடு. எவ்வளவு சீர்கெட்ட நிலையிலே தேவனை விட்டு எத்தனை தூரமாக நீ போயிருந்தாலும் சரி, நீ அவரிடம் திரும்பு, அவருக்கு சேவை செய். அவர் உன்னை ஏற்றுக் கொள்ள ஆயத்தமாகக் காத்து நிற்கிறார். ஒரு வேளை உனது பழைய பாவ நண்பர்கள் உன்னைக் கைவிடுவார்கள். “இதோ, உலகத்தின் முடிவு பரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களுடனே கூட இருக்கிறேன்” என்று சமாதானப்பிரபுவாகிய இயேசு சொல்லுகிறார்.

**M. R. Gschwend**

---

For **free** Gospel literature, books and tracts in over 540 languages, write to: **E-MAIL: info@angp.co.za**

**ALL NATIONS GOSPEL PUBLISHERS**

**P.O. Box 2191, PRETORIA, 0001, R.S.A.**

(A Gospel Literature Mission financed by donations)

(Reg. No. 1961/001798/08)